**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**O.S. 284/2008**

**நாள்.23.02.2026**

**பிவா.சா.2- பெருமாள்**

**க/பெ - தொப்பன்**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் கூலி வேலை செய்கிறேன். நான் பிச்சம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனது வயது 64 ஆகிறது.

2. குப்பம்மாள் வகையறா என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

3. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் வழக்கறிஞர் படித்து காண்பித்தார், விவரங்கள் தெரியும்.

4. எனது உடன்பிறந்த சகோதரி குப்பம்மாள் என்றால் சரிதான். மூக்கனம்பலம் என் தங்கையை திருமணம் செய்துள்ளார். எனது தந்தையில் உண்மையான பெயர் மாரியம்பலம் என்றால் சரியல்ல, தொப்பன்அம்பலம் ஆகும்.

5. வழக்கு சொத்தின் பக்கத்தில் எனக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன், அதன் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் இருப்பதாக கூறியதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. தாவா வழக்கு சொத்தில் சர்வே எண், நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. வாதியை எனக்கு தெரியுமா என்றால் உறவினர் என்பதால் எனக்கு தெரியும். குப்பம்மாளின் அம்மா நாச்சம்மாள். நாச்சம்மாளின் உடன்பிறந்தவர்கள் பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

7. ராமன் அம்பலம், பெருமாள் அம்பலம் ஆகியோரை தெரியுமா என்றால் மூக்கன் அம்பலம் சொல்லியுள்ளார், அதனால் தெரியும். ராமன் அம்பலம், பெருமாள் அம்பலம் ஆகியோர் நாச்சம்மாளின் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான்.

8. 1ம் வாதி குப்பம்மாள் அவரது தாய்மாமன் பெருமாள் அம்பலத்தை திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். 1ம் வாதி குப்பம்மாளுக்கும், பெருமாள் அம்பலத்திற்கும் 2ம் வாதி நாச்சம்மாள் மகள் என்றால் சரிதான். குப்பம்மாளின் உடன்பிறந்த சகோதரர் முருகன் அம்பலம் என்றால் சரிதான். முருகன் அம்பலம் இறந்துவிட்டார் என்றால் சரிதான், எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார் என்றால் அதுபற்றி தெரியாது.

9. முருகன் அம்பலம் மற்றும் குப்பம்மாளின் தகப்பனார் பெயர் ராமன் அம்பலம். ராமன் அம்பலத்திற்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள். முருகன் அம்பலம் மற்றும் குப்பம்மாள் ஆகியோர் ராமன் அம்பலத்தின் முதல் தாரமான நாச்சம்மாளின் வாரிசுகள் என்றால் சரிதான்.

10. ராமன் அம்பலத்தின் இரண்டாவது மனைவி பெயர் தெரியாது. அவர் 2ம் பிரதிவாதி மூக்கன் அம்பலத்தின் தாயார் என்றால் சரிதான்.

11. தாவா சொத்துக்கள் ராமன் அம்பலத்திற்கும், 1ம் வாதி குப்பம்மாளுக்கும் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**